செ.வெ.எண.04 நாள் : 02.04.2020

# அரியலூர் மாவட்டம்
# நியாயவிலைக்கடைகளில் முறையாக சமூக விலகலை கடைபிடிக்கப்படுகிறதா என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், அரசு கலைக்கல்லூரி சாலையில் உள்ள நியாயவிலைக்கடையில் சமூக விலகல் கடைபிடிக்கப்பட்டு வருகிறதா என்பதனை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில், கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

144 தடை உத்தரவு விதிக்கப்பட்டு அனைத்து பகுதிகளிலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலுள்ள அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒரு குடும்பத்தினருக்கு ரூ.1000/-மும், அரிசி, பருப்பு, சர்க்கரை மற்றும் பாமாயில் ஆகிய அத்தியாவசிய பொருட்கள் விலையில்லாமலும் வழங்க உத்தரவிட்டார்கள்.

அதன்படி, அரியலூர் மாவட்டத்திலுள்ள 440 நியாயவிலைக்கடைகளிலும் இன்று முதல் 227448 தகுதி பெறும் அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.1000/- வழங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதன்படி, இன்று முதல் அரியலூர் மாவட்டத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.1000/-மும், அரிசி, பருப்பு, சர்க்கரை மற்றும் பாமாயில் ஆகிய அத்தியாவசிய பொருட்கள் நாள் ஒன்றுக்கு ஒரு நியாயவிலைக்கடையில் 100 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சமூக விலகலை கடைபிடிக்கும் வகையில் முதல் நாளே குடும்ப அட்டைதாரர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு, பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், டோக்கன் பெற்றவர்கள் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள நாள், நேரம் ஆகியவைகளை கணக்கில் கொண்டு தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நியாயவிலைக்கடைகளுக்கு வந்து விலையில்லா பொருட்களும், நிதியுதவியும் பெற்று செல்லவும். நியாயவிலைக்கடைகளில் சமூக விலகலை கடைபிடித்து இத்தொற்று நோய் பரவா வண்ணம் தாங்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தஆய்வின்போது, கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், வட்டாட்சியர் சந்திரசேகர் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**